25.09.2025

அ.வ.எண். 1075/2017

வா.சா.2 - பூபாலசுப்பிரமணியம் த/பெ. முனியப்பன்

வா.சா.2 முதல் விசாரணை தொடர்ச்சி

| ஆவண எண். | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.12 | - | பல்லடம் தனி வட்டாட்சியர் அவர்கள் முத்துசாமி பெயரில் வழங்கிய மனைவரி தோராய பட்டா எண்.1311 | அசல் |
| வா.சா.ஆ.13 | 03.07.2014 | மன்ற துணை வட்டாட்சியர் அவர்கள் கொடுத்த பட்டா மாறுதல் உத்தரவு | அசல் |
| வா.சா.ஆ.14 | 03.07.2014 | நத்தம் நில வரி திட்ட தூய சிட்டா | உண்மை நகல் |
| வா.சா.ஆ.15 | - | பூபாலசுப்பிரமணியத்தின் ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |

தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

1. வா.சா.ஆ.12 ஆவணம் 1991 ம் வருடம் என் தாத்தா, முத்துசாமிக்கு மட்டும் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அது 6 செண்டிற்குரியது. வா.சா.ஆ.13 பட்டா மாறுதல் உத்தரவு 1400 சதுரடிக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.13 உத்தரவில் சூலூர் சார் பதிவாளர் அலுவலக பத்திர எண்.3117/2014, 28.03.2014 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பெற்றுள்ள முனியப்பன் மகன் பூபால

சுப்பிரமணியம் என்பவரை சிட்டாவில் பட்டா எண்.1311 ல் கூட்டாக தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது என கண்டுள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை தாக்கல் செய்தால் தான் அந்த ஆவணத்தில் உள்ள சொத்து விவரம் தெரியவரும் என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

மேலும் குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur